மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்): அந்த Sentence உடன் முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு அவர்கள் (குறுக்கீடு). . நன்றி சொல்லி முடியுங்கள்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஈடுபட ஒரு பெரிய சமூக சேவை இயக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும், புதிய மையங்கள் தொடங்குவதற்காகவும் அதிக நிதி நிவாரணம் அரசு ஒதுக்க வேண்டும். தனியார் மருத்துவமனைகளில் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் மேற்கொள்ளும் குடும்பக் கட்டுபாடு நடவடிக்கைகளுக்கு ஏற்ப ஊக்கங்களும், உதவிகளும் அளித்து குடும்பக் கட்டுப்பாட்டு இலக்குகளை அடையும் பொறுப்பை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஊக்கம் கொடுக்கப்படவேண்டும் என்று கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

8. அறிவிப்பு

7-5-2002 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்): ஒரு நிமிடம் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 7-5-2002 அன்று செவ்வாய்க் கிழமை ராஜ்பவனில், மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வசதியைக் கருத்தில் கொண்டு, மாலை 7.30 மணிக்குப் பதிலாக, 8.00 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(ஈ) கோரிக்கை எண் 18- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை—தொடர்ச்சி.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்): திரு. எச்.எம். ராஜு: